<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.</u>

<u>அ.வ.எண்.118/2018</u>

2025–ம் வருடம் அக்டோபர் திங்கள் 06–ம் நாளன்று 3ம் பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.10–வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 விதியின்படி 95வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: ஜெ.கணேஷ்** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**<u>முதல் விசாரணை</u>:–**

நான் இவ்வழக்கில் 3வது பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். 3ஆம் பிரதிவாதியின் ஆதார் அட்டை நகல் பி.வா.சா.ஆ.59 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 25.08.2008 ஆம் தேதிய 3 ஆம் பிரதிவாதி பெயரிலான கிரைய ஆவணம் எண்.5048/2008 சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.60 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வில்லங்க சான்றிதழ் கணிணி நகல் பி.வா.சா.ஆ.61.ஆக குறியீடு செய்யப்படுகிறது. (ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. வில்லங்க சான்றிதழ் முழுமையாக இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது) 3 ஆம் பிரதிவாதி பெயரிலான கூட்டுப்பட்டா எண்.1336 கணிணி நகல் பி.வா.சா.ஆ.62 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதிகள் தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**1, 2, 4 முதல் 6, 8 முதல் 15, 18, 19, 21 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 62, 63, 64, 65, 67, 68, 70 முதல் 72, 75 முதல் 89, 91 முதல் 100, 102 முதல் 107, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது சொந்த ஊர் கரூர் மாவட்டம். என் சொந்த ஊரிலிருந்து தும்பிவாடி கிராமம் 13 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். நான் கரூரில் பணி செய்து வருகிறேன். தும்பிவாடி கிராமத்தில் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் பூர்வீக வகையில் எந்த சொத்துக்களும் இல்லை. பி.வா.சா.ஆ.60 கிரையபத்திரத்தை பி.வா.சா.ஆ.8 ன் அடிப்படையில் எழுதிக்கொடுத்த ரவிச்சந்திரனுக்கே அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தக்களில் உரிமையில்லை என்றும் ஆகையால் பி.வா.சா.ஆ.60 ன் கீழ் உங்களுக்கு கிரையம் எழுதிக்கொடுப்பதற்கு ரவிச்சந்திரனுக்கு சட்டப்படி உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.60 ஆவணம் சட்டப்படி செல்லாது என்பதால் பி.வா.சா.ஆ.60 ன் அடிப்படையில் பெறப்பட்ட பி.வா.சா.ஆ.62 செல்லாது என்று சொன்னால் சரியல்ல. 106 நபர்கள் கிரையம் பெற்றதற்காக நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.